## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

இந்த நிறுவனத்தின் பின்வரும் பதவிக்கு தகுதியான இலங்கையர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

01. முகாமைத்துவ உதவியாளர் பதவி (தொழில்நுட்பம் சாராத) - MA 1.1 (தரம் III)

**தகைமைகள்** : **வெளியக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி, கணிதம் மற்றும் ஆங்கில மொழி உட்பட நான்கு பாடங்களுக்கான திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

மற்றும்

க.பொ.த (உ/த) பரீட்சையில் ஆகக்குறைந்தது மூன்று பாடங்களில் (பொது சாதாரண பரீட்சை தவிர்ந்த) சித்தியடைந்திருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு**

க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்கான திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

முதன்மை நிலை - திறமை அல்லது திறமையற்ற பணியாளர் பிரிவின் கீழ் நிரந்தர பதவியில் குறைந்தபட்சம் ஐந்து ஆண்டுகள் சேவை அனுபவம்

**சம்பள அளவுத்திட்டம்** : MA 1.1 - ரூபா 27,910.00 -10×300 - 7×350-4×495- 20×660- ரூபா 48,540.00 (ஆரம்பத்தில் சம்பளம் ரூபா 27,910.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட பிற கொடுப்பனவுகள்)

**வயதெல்லை** : 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை பொருந்தாது.

**ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும்/ அல்லது தொழிற்தேர்ச்சி பெற்ற நேர்முகத்தேர்வு குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு நேர்முகத்தேர்வின் மூலம்

**வேறு பிரதிபலன்கள்** :

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு முறையே 12% மற்றும் 3% பங்களிப்பு நிறுவனத்தினால் செய்யப்படும். (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு அடிப்படை சம்பளத்தில் 10%)
- உறுப்பினர் மற்றும் அவரது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுக்கான பங்களிப்பு மருத்துவக் காப்பீட்டுத் திட்டம்
- அருகிலுள்ள நகரத்திற்கு போக்குவரத்து வசதி (கடுவலை/கொட்டாவ)

**விண்ணப்பிக்கும் முறை** :

உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் மற்றும் விலாசத்தை கொண்ட உங்களது முழுமையான உயிர் தரவு குறிப்பு மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் நகல்களுடன் பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு 2023 டிசம்பர் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும். அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவன தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பும் தபால் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலேனும் முழுமையற்ற மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை,
அத்துருகிரிய.
தொலைபேசி 011-2770232

12-332/1

## தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்தல்

இந்நிறுவனத்தின் கீழுள்ள பதவிகளுக்காக தகுதியுடைய இலங்கையர்களிடமிருந்து ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **பயிற்சியளித்தல் நிபுணர் (பெருந்தோட்ட முகாமைத்துவம்)** MM 1.1 (தரம் II )

**தொழில் விபரம்** : விடயத்திற்குரிய விரிவுரைகளை நடாத்துதல், கைத்தொழில் பயிற்சியின் தேவைப்பாட்டை மதிப்பீடு செய்தல், செயற்றிட்டங்கள்/பாடநெறிகளை தயாரித்தலும் மேம்படுத்தலும், பொருத்தமான பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறிகளை திட்டமிடலும் நடாத்துதலும், பயிற்சி பாடநெறிகளின் செயற்றிறனை மதிப்பீடு செய்வதற்கு நடைமுறைகள் மற்றும் நுட்பங்களை மேம்படுத்தல், நிறுவனத்தின் பாடநெறி/செயற்றிட்டங்களின் முகாமைத்துவ திறனை அதிகரிப்பதற்கு புதிய தொழில்நுட்ப முறைகளை நடைமுறைப்படுத்தல்.

**தகைமைகள்** : விவசாயம்/விவசாய அறிவியல்/விவசாய தொழில்நுட்பம்/விவசாய வணிக முகாமைத்துவம்/பெருந்தோட்ட அறுவடை தொழில்நுட்பம் (விவசாயத்தில் சிறப்பு பொருளாதாரம்) அல்லது பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டமொன்று குறைந்தபட்சம் ஒரு (01) வருடகாலம் கூட்டுதாபனம்/சபை அல்லது நிறுவனமொன்றில் பதவிக்குரிய தகுதியான அனுபவம்

**சம்பள அளவுத் திட்டம்** : ரூபா 53,175.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமையுடைவர்கள்.

**வயதெல்லை** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்

2. **உதவிப் பணிப்பாளர் (சந்தைப்படுத்தல், வியாபார மேம்படுத்தல் மற்றும் திட்டமிடல்)** MM 1.1 (**தரம்** II)

**தொழில் விபரம்** : பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறிகள் மற்றும் ஏனைய சேவைகளின் மேம்படுத்தல் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், சந்தை ஆராய்ச்சி கற்கைகளை ஆரம்பித்தல் மற்றும் கைத்தொழிலின் நுகர்வு மற்றும் சந்தை வாய்ப்பை புரிந்து கொள்வதற்காக தொழிற்சந்தையை பகுப்பாய்வு செய்தல், சமகால தேவைகளை கண்டறிந்து அதன் மூலம் செயற்றிட்டங்கள்/பாடநெறிகளை மேம்படுத்துவதற்காக முகாமைத்துவத்திற்கு ஒத்தாசை வழங்கல், சேவை பெறுநர்களுக்கு பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறிகள் அல்லது சேவையை தொடர்பாடல் செய்தல், தரப்பினர்களுக்கிடையே தொழில் நிபுணத்துவத்தை பராமரித்தல், தொழில் நிபுணத்துவத்தை நடாத்திச் செல்லல் மற்றும் மேம்படுத்துவதற்கான திறன் கூட்டங்கள், கல்விச்சார் கருத்தரங்குகள் மற்றும் ஆலோசனை பயிற்சி செயலமர்வுகளுக்கு பங்குப்பற்றல், வியாபார திட்டமிடல் பகுப்பாய்வு மற்றும் அபிவிருத்தி, சந்தைப்படுத்தல் உபாயமுறை மற்றும் நிறுவன திட்டமிடல், செயற்றிட்ட திட்டமிடல், கணிப்புகள், பாதீடு, நிதி மற்றும் கால அட்டவணை வெளியீடு உள்ளிட்ட திட்டமிடல் மற்றும் விற்பனை மற்றும் சந்தை நோக்கத்தை நிலையான அடிப்படையில் அடையக் கூடிய வகையில் கோரிக்கைகளுக்கமைய செயற்றிட்டங்களுக்கு முன்னுரிமையளித்தல், கல்வி மற்றும் பயிற்சியளித்தல் தாக்க மதிப்பீடுகள், வெளியீட்டு செயற்பாட்டு திட்டம், பயிற்சி பாதீடு தயாரித்தல், வருடாந்த அறிக்கைக்காக செயலாற்று மீளாய்வு அறிக்கை மற்றும் பயிற்சி கூறுகள், நிறுவனத்தின் பிராந்திய கல்விசார் ஆளணி மற்றும் நிறுவனத்தின் தொழில்முறை உறுப்புரிமை மற்றும் ஏனைய கல்விசார் செயற்பாடுகளும் அதனோடு தொடர்புடைய வெளி அமைப்புகளுடன் தொடர்பிணை பேணுதல்.

**தகைமைகள்** : அங்கீகரிப்பட்ட பல்கலைகழகமொன்றில் பெற்றுக்கொண்ட சந்தைப்படுத்தல் முகாமைத்துவம்/வியாபார முகாமைத்துவம்/வியாபார நிர்வாகம்/வணிகவியல் அல்லது பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டமொன்று குறைந்தபட்சம் ஒரு (01) வருடகாலம் கூட்டுதாபனம்/சபை அல்லது நிறுவனமொன்றில் பதவிக்குரிய தகுதியான அனுபவம்

**சம்பள அளவுத் திட்டம்** : ரூபா 53,175.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமையுடைவர்கள்.

**வயதெல்லை** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

3. பயிற்சியளித்தல் உத்தியோகத்தர் (பெருந்தோட்ட பொறியியல்) JM 1.1 (தரம் II)

**தொழில் விபரம்** : விடயத்திற்குரிய விரிவுரைகளை நடாத்துதல், பயிற்சியளித்தல் நிபுணருக்கு வழங்கப்பட்டுள்ள கடமைகளை மேற்கொள்ள பயிற்சியளித்தல் நிபுணருக்கு உதவி செய்தல், பயிற்சியளித்தல் நிபுணரின் வழிகாட்டலுக்கமைய பயிற்சி பாடநெறிகள் மற்றும் கைந்நூல் திட்டமிடல், கைத்தொழிலுக்கு பொருத்தமான பயிற்சி செயற்றிட்டங்கள்/பாடநெறி திட்டமிடல், ஒருங்கிணைப்பு நடவடிக்கை மற்றும் செயற்படுத்தல், கல்வியியல் தாக்க மதிப்பீடுகள் மற்றும் பயிற்சி

**தகைமைகள்** : பெருந்தோட்ட பொறியியல்/விவசாயம் (விவசாயத்தில் சிறப்பு பொருளாதாரம்)/விவசாய அறிவியல்/ விவசாய தொழில்நுட்பம்/பெருந்தோட்ட அறுவடை தொழில்நுட்பம் (பெருந்தோட்ட பொறியியல் சிறப்பு) அல்லது பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் தொடர்புடைய பட்டமொன்று

**சம்பள அளவுத் திட்டம்** : ரூபா 42,600.00 மற்றும் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளுக்கு உரிமையுடைவர்கள்.

**வயதெல்லை** : 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**ஆட்சேர்ப்பு முறை** : எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும்/ அல்லது தொழிற்தேர்ச்சி பெற்ற நேர்முகத்தேர்வு குழுவொன்றினால் நடாத்தப்படுகின்ற கட்டமைப்பு நேர்முகத்தேர்வின் மூலம்

**பொதுக் காரணங்கள்** : மேற்கூறிய அனைத்து பதவிகளுக்கும் விண்ணப்பதாரர் ஆங்கில மொழியை நன்றாக கையாளக்கூடிய திறமையுடையவராகவும் கனிணி மென்பொருள் பயன்பாடு தொடர்பான அறிவும் காணப்பட வேண்டும்

மேற்கூறிய பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் குறித்த கடமைகளை நிவர்த்தியாக நிறைவேற்றுவதற்குரிய உடல் உள ரீதியாக தேர்ச்சியுடையவராகவும் சேவை தேவைக்கருதி பிரதான அலுவலகத்தில் அல்லது நாடளாவிய ரீதியில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்ற கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

<u>வேறு பிரதிபலன்கள்</u>

- ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றிற்கு முறையே 12% மற்றும் 3 % பங்களிப்பு நிறுவனத்தினால் செய்யப்படும். (ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ஊழியர் பங்களிப்பு அடிப்படை சம்பளத்தில் 10%)
- அருகிலுள்ள நகரத்திற்கு போக்குவரத்து வசதி (கடுவலை/கொட்டாவ)

<u>**விண்ணப்பிக்கும் முறை**</u>

உறவினர் அல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர் மற்றும் விலாசத்தை கொண்ட உங்களது முழுமையான உயிர் தரவு குறிப்பு மற்றும் தொடர்புடைய சான்றிதழ்களின் நகல்களுடன் பதிவுத் தபாலில் கீழுள்ள முகவரிக்கு 2023 டிசம்பர் 18 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும். அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் நிறுவன தலைவரின் ஊடாக விண்ணப்பப்படிவத்தை அனுப்ப வேண்டும். விண்ணப்பபடிவம் அனுப்பும் தபால் உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலேனும் முழுமையற்ற மற்றும் தாமதமான விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

**கவனத்திற் கொள்க**

- மிகவும் தகுதியான விண்ணப்பதாரர்கள் மாத்திரம் நேர்முக தேர்வினை முகம் கொடுக்க தகைமையை பெற்றுக்கொள்வார்கள்.
- இவ் அறிவித்தல் www.nipm.gov.lk இணையத்தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி

தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனம்,
எம்.டி.எச் ஜயவர்தன மாவத்தை,
அத்துருகிரிய.
தொலைபேசி 011-2770232

12-332/2

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

### தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

*2023.11.17 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலை திருத்தம் செய்தல்*

*2023.11.17 ஆந் திகதி வெளியிடப்பட்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானி இலக்கம் 2359 ஐக் கொண்ட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தின் கீழ் வருகின்ற தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளில் 2024 ஆம் ஆண்டில் மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.*

எஸ்.சீ. ஜகத்,
பணிப்பாளர் நாயகம்.

| *தொடர் இல.* | *பாடநெறிக் குறியீட்டு எண்* | *பாடநெறியின் பெயர்* | *திருத்தம் செய்யப்பட வேண்டிய முறை* |
|---|---|---|---|
| 85 | ETB 28 | இலத்திரனியல் தொழில்நுட்பவியலில் தேசிய டிப்ளோமா<br>NVQ மட்டம் 5<br><br>முழு நேரம்<br>01 ½ வருடங்கள்<br><br>(அடிப்படை கற்கைநெறி உள்ளடங்கும்) | இந்தப் பாடநெறி 2023.11.17 ஆந் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானியில் இருந்து நீக்கப்பட்டுள்ளது. |
| 86 | ETA 28 | இலத்திரனியல் தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா | மருதானை தொழில்நுட்பவியல் கல்லூரி தற்போது நடைபெற்று வரும் கல்லூரியாக சேர்க்கப்பட்டுள்ளது. |
| 94 | ETA 22 | கடல்சார் மற்றும் ஏற்பாட்டியல் முகாமைத்துவ தொழில் நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. உரிய துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்<br><br>2. 2023.12.15 ஆந் திகதியன்று 17 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |
| 96 | BSA 01 | கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. உரிய துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்<br><br>2. 2023.12.15 ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |

| தொடர் இல. | பாடநெறிக் குறியீட்டு எண் | பாடநெறியின் பெயர் | திருத்தம் செய்யப்பட வேண்டிய முறை |
|---|---|---|---|
| 126 | ETB 36 | விவசாய உற்பத்தித் தொழில்நுட்பவியலில் தொழில்நுட்ப தேசிய டிப்ளோமா | ஆட்சேர்ப்பு தகைமை<br><br>• நாற்றுமேடை அபிவிருத்தி உதவியாளர்<br>• கள உதவியாளர் (விவசாயம்)<br>• தாவர திசு தோட்ட வளர்ப்பு ஆராய்ச்சி ஆய்வக உதவியாளர்<br>• மலர் வளர்ப்பு மற்றும் இயற்கையை ரசித்தல் அபிவிருத்தி உதவியாளர்<br><br>மேற்குறிப்பிடப்பட்ட பாடநெறிகளுள் ஒன்றில் NVQ மட்டம் 4 சான்றிதழைப் பெற்றிருத்தல்<br><br>அல்லது<br>க.பொ.த. (உ.த.) உயிரியல் தொழில்நுட்பம் / பௌதீக தொழில்நுட்பம் / விஞ்ஞானம் போன்ற பாடத்துறைகளில் இருந்து ஒரே நேரத்தில் குறைந்தது மூன்று பாடங்கள் சித்தியடைந்திருத்தல். (GIT, பொது ஆங்கிலம் தவிர)<br><br>2. 2023.12.15ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |
| 138 | ETA 20 | உணவு தொழில்நுட்பவியலில் உயர் தேசிய டிப்ளோமா<br><br>முழு நேரம்<br>1 வருடம்<br><br>(This course includes the subjects of Analytical Chemistry, Biotechnology, Nutrition, Quality Control, and Food Safety Management for Selection, Preservation, Processing, Packaging, Distribution and Use of Safe Food) | ஆட்சேர்ப்பு தகைமை<br>1. உரிய துறையில் NVQ மட்டம் 5 சான்றிதழொன்றைப் பெற்றிருத்தல்<br><br>2. 2023.12.15 ஆந் திகதியன்று 17 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். |

12-335